**செய்தி வெளியீடு எண் : 859** **நாள்: 29.05.2022**

செய்தி வெளியீடு

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் **"கலைஞர் கலைத்துறை வித்தகர் விருது"** வழங்கப்படும் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது

2) அவ்வகையில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு, கலைஞர் கலைத்துறை வித்தகர் விருதை 2022 ஆம் ஆண்டு ஜூன் 3-ம் நாள் அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் வழங்க ஏதுவாக, விருதாளரை தேர்வு செய்ய திரைப்பட இயக்குநர் திரு.எஸ்.பி.முத்துராமன் அவர்களை தலைவராகவும், நடிகர் / நடிகர் சங்கத் தலைவர் திரு.நாசர் மற்றும் நடிகர் / இயக்குநர் திரு.கரு.பழனியப்பன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்வுக்குழுவினை அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

3) தேர்வுக்குழுவால் பரிந்துரைக்கப்படும் விருதாளருக்கு விருதுத் தொகையான ரூ.10 இலட்சம் மற்றும் நினைவுப்பரிசு ஆகியவற்றினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி கௌரவிப்பார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in